# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)
**BA DEGREE EXAMINATION DECEMBER 2019**
(First Semester)

Branch – **TAMIL**

## ILAKKANAM-I PAYANPAATTU ILAKKANAM

Time : Three Hours | Maximum : 75 Marks

பகுதி அ (10 மதிப்பெண்கள்)

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க</u> (10 x 1 = 10)

1 அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
(அ) அது, அஃது, ஐந்து, எதுகை (ஆ) அஃது, அது, எதுகை, ஐந்து
(இ) அஃது, எதுகை, அது, ஐந்து (ஈ) எதுகை, அஃது, ஐந்து,அது

2 நாள்தோறும் நல்ல செயல்களைச் செய்! எவ்வகை வாக்கியம்
(அ) உடன்பாட்டு வாக்கியம் (ஆ) எதிர்மறை வாக்கியம்
(இ) கட்டளை வாக்கியம் (ஈ) உணர்ச்சி வாக்கியம்

3 நேற்று பெருமழை பெய்ததால் ஆற்றில் வெள்ளம் கரைபுலண்டு ஓடியது – எவ்வகை வாக்கியம்
(அ) தனி வாக்கியம் (ஆ) செய்வினை வாக்கியம்
(இ) கலவை வாக்கியம் (ஈ) உணர்ச்சி வாக்கியம்

4 செயப்பாட்டு வினை சொற்றொடரைக் கண்டறிக
(அ) சேக்கிழார் சோழனால் வரவேற்கப்பட்டார்
(ஆ) சேக்கிழாரைச் சோழன் வரவேற்றார்
(இ) சேக்கிழார் சோழனை வரவேற்றார்
(ஈ) சோழன் சேக்கிழரை வரவேற்றாா;

5 ஒருமைப் பன்மை பிழைகளை நீக்குக.
(அ) பல தனிப்பாடல்கள் புலவர்களால் பாடப்பட்டது
(ஆ)பல தனிப்பாடல்கள் புலவர்களால் பாடப்பெற்றன.
(இ) பலதனிப்பாடல்கள் புலவரால் பாடப் பெற்றது.
(ஈ) பல தனிப்பாடல்கள் புலவரால் பாடப் பெற்றவை

6 பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தினைத் தேர்வு செய்க.
(அ) மேஸ்திரியிடம் அலமாரி ஜன்னல் சாவி
(ஆ) பஜார் மைதானத்தில் ஜமக்காளம்
(இ) கடைத்தெரு திறந்தவெளித் திடலில் கூட்டம்
(ஈ) ஸ்கூல் ஊரின் நடுவே உள்ளது

7 நல் - என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சத்தினைத் தேர்தெடுக்க
(அ) நல்கு, (ஆ) நல்கிய
(இ) நல்குதல் (ஈ) நல்குவார்

8 சதுரம் - பெயர்ச்சொல்லின் வகையினை அறிக
(அ)காலப்பெயர் (ஆ) இடப்பெயர்
(இ) பண்புப்பெயர் (ஈ)சினைப்பெயர்

9 ஏ – என்ற ஓரெழுத்தின் பொருளினைக் கூறுக.
(அ) அம்பு (ஆ) இரக்கம்
(இ) பசு (ஈ) அழகு

10 எதிர்சொல் தருக : உயர்ந்து

பகுதி - ஆ (25 மதிப்பெண்கள்)

<u>ஒரு பக்க அளவில் விடை தருக</u> (5 x 5 = 25)

11 அ ககர வரிசையில் சொற்களை அமைத்து எழுதுக.

அல்லது

ஆ தன்வினை, பிறவினை வாக்கியத்தினைச் சான்று தந்து விளக்குக.

12 அ கலவை வாக்கியம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

அல்லது

ஆ செய்வினைச் சொற்றொடரைச் சான்று தந்து விளக்குக.

13 அ மரபுப்பிழைச் சொற்களை வடிவமைத்து எழுதுக.

அல்லது

ஆ வாக்கியங்களில் ஒருமை – பன்மைப் பிழைகளை எவ்வாறு நீக்குவது – சான்று தருக.

14 அ வினையாலணையும் பெயரினை எடுத்துக்காட்டுடன் விவரி.

அல்லது

ஆ வேர்ச்சொல் கண்டறியும் பாங்கினைச் சான்றுடன் விவரி.

15 அ சேர்த்து எழுதும் போது கவனிக்க வேண்டியவற்றை எடுத்துரைக்க.

அல்லது

ஆ ஓரெழுத்து ஒரு மொழியினைச் சான்றுகளுடன் விளக்குக.

பகுதி - இ (40 மதிப்பெண்கள்)

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி</u> (5 x 8 = 40)

16 அ வாக்கியத்தின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரி.

அல்லது

ஆ உடன்பாட்டு, எதிர்மறை வாக்கியங்களைச் சான்று தந்து விவரி.

17 அ நேர்கூற்று, அயற்கூற்று வாக்கிய அமைப்பினை விளக்குக.

அல்லது

ஆ தனிவாக்கியம், தொடர் வாக்கியங்களை விரிவாக எழுதுக.

18 அ வலிமிகும் இடங்களை எடுத்துரைக்க.

அல்லது

ஆ வடசொற்கள் தமிழில் அமையும் முறையினை விளக்குக.

19 அ பெயர்ச்சொல், வினைச் சொல் வகைகளை விவரிக்க.

அல்லது

ஆ வேர்ச்சொல்லிருந்து சொல்லாக்கம் அமைக்கும் முறையினை எடுத்துக்காட்டுடன் தருக.

20 அ எதுகை, மோனை, இயைபுத் தொடர்கள் செய்யுளில் அமையும் முறையினை விவரி.

அல்லது

ஆ விடையின் வகைகளை விவரி.

Z-Z-Z END